

# கனக அமுதம்

## அமரர் கனகாம்பிகை மனோகரன்

நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.10.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நற்குஞ்சரக் கன்றை நண்ணில் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்

# துதிப்பாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் துதி

*திருச்சிற்றம்பலம்*

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றோமே.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனல் செல்வமல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடும்
கணபதி யீச்சரங் காமுறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
    சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
    பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
    உமைமண வாளனுக்(கு)ஆட்
பாரும் விசும்பும் அறியும்
    பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

வேதநெறி தழைத்தோங்க
    மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
    புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
    திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
    திருத்தொண்டு பரவுவாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல்
எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான
பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே
குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே
கதிர்காமப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
　　மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
　　குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
　　நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
　　விளங்குக உலக மெல்லாம்

## கந்தரலங்காரம்

நீலச்சிகண்டியில் ஏறும் பிரான்
　　எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்
　　குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்து
　　அறிவார் சிவயோகிகளே
காலத்தை வென்று இருப்பார்
　　மரிப்பார் வெறும் கர்மிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# கனகாம்பிகை மனோகரன்
# வாழ்வும் வளமும்

விருந்தினரான ஆத்மா
நெருப்பு வீட்டில் நுழைகிறது.
தூயோர், அதனை உபசரித்து,
அமைதிப்படுத்துகின்றனர்.
- கடோபநிஷத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கனகாம்பிகை யாழ்ப்பாணம் ஊரெழுவைச் சேர்ந்த சதானந்தன் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது மகளாக 1952 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி திருவோண நட்சத்திரத்தில் பிறந்தார். அமரர் கமலநாயகி சர்வானந்தா அவரின் மூத்த சகோதரி ஆவர். விக்கினேஸ்வரன் அவரது இளைய சகோதரர். தற்போது பிரான்ஸில் வாழ்கிறார்.

கனகாம்பிகை தமது ஆரம்பக் கல்வியை ஊரெழு கணேசவித்தியாசாலையில் கற்றார். இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் பெற்றார். க.பொ.த உயர்தரத்தை அநுராதபுரம் விவேகானந்தக் கல்லூரியில் பூர்த்தி செய்தார்.

1972 இல் கனகாம்பிகை பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானார். அங்கு பொருளியல் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொண்டு, 1976 இல் பட்டம் பெற்றுப் பட்டதாரியானார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கனகாம்பிகை பட்டப் படிப்பை மேற்கொண்டபோது, அப்போது அங்கு மூத்த மாணவராகத் தமிழ்ச் சிறப்புக் கலை பட்டப் படிப்பை மேற்கொண் டிருந்த துரை. மனோகரனுக்கும், அவருக்கும் இடையே காதல் ஏற்பட்டது. இரு வீட்டார் சம்மதத்துடன் அவர்களது காதல் 1977 இல் திருமணத்தில் நிறைவெய்தியது. அவர்களது இல்லற வாழ்க்கை இவ்வுலகில் 44 ஆண்டுகள் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை. மனோகரன் - கனகாம்பிகை தம்பதியினருக்கு 1987 இல் ஓர் ஆண் குழந்தை இறந்து பிறந்தது. அதையடுத்து, இன்னொரு குழந்தை 'அபோஷன்' ஆகியது. 1990 இல் நவீனன் பிறந்தார். நவீனனின் பிறப்பு, அவர்களது குடும்பத்தில் அளவிலா மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. நவீனனைக் கண்ணும் கருத்துமாகக் கனகாம்பிகை வளர்த்தெடுத்தார். நவீனனும் தாய் மீது சொல்லொணாப் பாசத்தை வைத்திருந்தார்.

கனகாம்பிகை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பின்னர், முதலில் யாழ்ப்பாணம் சுண்டிக்குழி மகளிர் கல்லூரியில் சில காலம் ஆசிரியையாகக் கடமையாற்றினார். பின்னர், 1979 முதல் கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியில் நிரந்தர ஆசிரியையாக நியமனம் பெற்றார். காலப்போக்கில் அக் கல்லூரியின் உப அதிபராகவும் உயர்ச்சி பெற்றார். கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியின் வளர்ச்சியில் கனகாம்பிகை மனோகரனின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களுடன் நல்லுறவைப் பேணியதுடன், மாணவிகளின் கல்வி வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வந்தார்.

தமது குடும்பத்தின் சிறப்புக்கும், உயர்வுக்கும் கனகாம்பிகை ஆற்றிவந்த பங்களிப்பு அளவிட முடியாதது. குடும்பப் பாரம் முழுவதையும் தமது தலைமீது சுமந்து, குடும்பத்தின் ஏற்றத்தையே தமது இலட்சியமாகக் கொண்டவர், அவர். எதையும் திட்டமிட்டுச் சிறப்பாகச் செய்துமுடிப்பதில் அவருக்கு நிகர் அவரே தான். தோல்விகளைக் கண்டு அவர் ஒருபோதும் துவண்டதே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் சிறப்பாகவே செயல்பட்டு, வெற்றியாளராகவே அவர் எப்போதும் விளங்கினார். வீட்டிலும், வெளியிலும் அவர் எப்போதும் உற்சாகமாகவே செயல்பட்டு வந்தார். வீட்டில் கணவருக்கோ, மகனுக்கோ ஏதாவது சிறு உடல்நிலைப் பிரச்சினைகள் இருந்தாலும், துடித்துப் பதைத்து, உடன் அதற்கான முயற்சிகளைச் செய்யும் அவர், தமது உடல் பிரச்சினைகளை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. அதுவே அவருக்குப் பிரச்சினையாகவும் அமைந்துவிட்டது.

கணவர் பேராசிரியர் துரை. மனோகரனின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் கனகாம்பிகை உற்ற துணையாக நின்று உதவினார். அவர் ஈடுபடும் எச்செயல்களிலும் பக்கத்தில் கனகாம்பிகையைப் பார்க்கலாம். துரை. மனோகரனின் ஒவ்வொரு முயற்சியிலும் கனகா அவரது வலது கரமாகவே விளங்கினார். துரை. மனோகரனின் காரியம் யாவற்றுக்கும் கைகொடுத்து, அவரின் உயர்ச்சிக்குப் பின்னால் கனகா எப்போதும் இருந்து வந்தார். எந்த நிலையிலும் இருவரும் மனமொத்த தம்பதியினராகவே இறுதிவரை வாழ்ந்து வந்தனர். எந்த விடயமானாலும், இருவரும் கலந்து ரையாடியே ஒரு முடிவுக்கு வருவர். இருவரில் எவரும் ஒருபோதும் தன்னிச்சையான முடிவுகள் எடுத்ததில்லை. துரை. மனோகரனுக்கு ஒரு சிறந்த ஆலோசகராகவும், உற்ற தோழியாகவும் கனகா விளங்கினார். மனோகரன் எங்கு சென்றாலும், எவ்வளவு நேரமானாலும், வீட்டுக்கு வந்து, தமது மனைவி கையால் சமைத்த உணவையே விரும்பி உண்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் நவீனனின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு முதன்மைக் காரணகர்த்தராகக் கனகாம்பிகை விளங்கினார். ஒரே மகனாக இருந்தபோதிலும், உயர் கல்விக்காக அவரை நோர்வே அனுப்புவதற்கு அவர் தயக்கம் காட்டியதில்லை. மகன் எங்கிருந்தாலும் உயர்ந்து வாழவேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது. இன்றைய நிலையில் மகன் நவீனனைச் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் நிரந்தர விரிவுரையாளராகக் காண்பதில், கணவரோடு சேர்ந்து, அவர் மிக்க மகிழ்ச்சி கொண்டிருந்தார். அடுத்ததாகத் தமது மகனின் திருமணத்தைத் தம் கண்களால் காணவேண்டும் என்ற ஆசையைத் தம் இலட்சியமாகவே அவர் கொண்டிருந்தார். அவர் ஆசைப்பட்டவற்றில், இந்த ஓர் ஆசையை மட்டுமே அவர் தமது வாழ்நாளில் நிறைவேற்றமுடியாமல் போய்விட்டது. அதனை நிறைவேற்றுவது, அவருக்குச் செய்யும் சிறந்த சமர்ப்பணமாகும்.

கனகாம்பிகை எவருக்கும் எப்போதும் உதவுவதில் முன்னின்று செயல்பட்டவர். கணவரும், அவரும் கல்வித் தானம் செய்வதில் எப்போதும் முன்னுக்கு நிற்பார்கள். கனகா என்றும், மிஸிஸ் மனோகரன் எனவும் எல்லோராலும் அவர் அன்புடன் நேசிக்கப் பட்டார். அவர் யார் மீதும் பொறாமை கொண்டதில்லை. எவருக்கும் அவரவர் முன்னேற்றம் கருதி, போதிய ஆலோசனைகள் வழங்குவார். அவரவர் நிறைகுறைகளை நெற்றிக்கு நேராகச் சொல்லும் உறுதி மனம் படைத்தவர். பேருக்கும், புகழுக்கும் ஒருபோதும் அவர் ஆசைப்பட்டதில்லை. தாம் ஒரு பேராசிரியரின் மனைவி என்றோ, ஒரு கல்லூரியின் உப அதிபர் என்றோ என்றும் அவர் கர்வப்பட்டதில்லை. எல்லோரோடும் சகஜமாகவே பழகுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் எளிமையான வாழ்வையே அவர் வாழ்ந்துகாட்டினார். உறவினர்கள், தெரிந்தவர்கள் அனைவருடனும் அவர் இயல்பாக அன்புடன் பழகினார்.

தெய்வபக்தி அவரது முக்கிய குணாம்சங்களில் ஒன்று. பலகொல்ல அம்மன் கோயில், முருகாமலை முருகன் கோயில், அம்பக்கோட்டை ஆஞ்சனேயர் கோயில் ஆகியன அவர் முக்கியமாகச் சென்று வழிபடும் கோயில்கள். முருகாமலை முருகன் கோயிலில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் திருவிளக்குப் பூசையில் அவர் முன்னின்று கலந்துகொள்வார். அம்பக்கோட்டை ஆஞ்சனேயர் கோயிலில் சனிக்கிழமை தோறும் சென்று வழிபாடு செய்வார். கத்தோலிக்கப் பாடசாலையில் கற்பித்ததனால், இயல்பாகவே இயேசுவின் மீதும், மாதாவின் மீதும் பக்தி கொண்டிருந்தார். தான தருமங்கள் செய்வதில் எப்போதுமே அவர் ஈடுபாடு கொண்டிருந்தார்.

கனகாம்பிகையின் திடீர் மறைவு, அவரது கணவர் துரை. மனோகரனுக்கும், மகன் நவீனனுக்கும் அளவிட முடியாத ஒரு பேரிழப்பு. அதேவேளை, அவரது உறவினர்களுக்கும், அவரோடு பழகியவர்களுக்கும், அவரை அறிந்தவர்களுக்கும் கூட அது ஒரு பேரிழப்பே ஆகும். ஆயினும், அமரர் கனகாம்பிகை, அரூப நிலையில் அதிக சக்தி மிக்கவராகத் திகழ்ந்து, அனைவரையும் ஆசிர்வதித்து, அன்பு செய்வார் என்ற நம்பிக்கை எம் அனைவருக்கும் உண்டு.

அவரது நல்ல ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வாழிய அவள்தன்**
**நினைவுகள் என்றும்!**

*துரை. மனோகரன்*

நைந்த துணிகளைக்
கழற்றி எறிந்துவிட்டு
புதிய துணிகள் கொள்வதுபோல்
ஆத்மா, உடல் களைந்து,
புதிதை எய்துகிறது.
- பகவத் கீதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழிய அவள்தன் நினைவுகள் என்றும்!

*துரை. மனோகரன்*

பேராதனைப் பல்கலையில்
நான் பயின்ற நற்காலம்
காலை ஒருநாள்
பல்கலை நூலகத்தில்
நூல்களைப் புரட்டிப்
பார்த்துக்கொண்டிருந்தேன் நான்
புதியதோர் மாணவி
நீலச் சேலையில் வெள்ளை 'போட'ரில்
என் முன்னால் தோன்றி நின்றாள்
"பாரதியார் கவிதைகள் எங்கே இருக்குது?"
விநயமுடன் அவள் கேட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தேடிக்கொடுத்தேன்
நன்றியினைத் தெரிவித்தாள்
"உங்கள் பேர் என்ன?"
நான் தான் கேட்டுவைத்தேன்
"கனகாம்பிகை"
தன் பெயரை அவள் சொன்னாள்
"நீங்கள் எந்த ஊர்?"
நானே கேட்டிருந்தேன்
"ஊரெழு" என்று
தன் ஊரை அவள் சொன்னாள்
"நான் உரும்பிராய்" என்று
என் ஊரை நான் சொன்னேன்
இரண்டுமே பக்கத்து ஊர்கள் என்பதில்
இருவருக்கும் நல்மகிழ்ச்சி
இரண்டொரு வார்த்தைகள்
இனிமையாய்ப் பேசிவைத்தோம்
மென்மையாய் அவள் பிரிந்தாள்
என்னை அறியாமல்
எனக்கெதுவும் சொல்லாமல்
என் மனம் ஏனோ
அவள் பின்னால் சென்றது.

சந்தித்தோம் பின்னரும்
பிரியமுடன் பேசுவோம்
பேசுவ தெல்லாம்
இரண்டொரு வார்த்தைகள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் மாலை
ஓரிரு நண்பருடன்
பிறிதொரு நண்பனைப்
பயணம் அனுப்புதற்காய்
சரசவி உயன ரயில் நிலையம்
நான் வந்தேன்
அப்போது
ஊருக்குச் செல்வதற்காய்த்
தோழியர் குழாத்துடன்
அவள் அங்கு வந்திருந்தாள்
ரயிலில் ஏறிநின்று
"வீட்டுக்கு வாருங்கோ"
என்று அவள் கையசைத்தாள்
நானும் சரியென்று கைகாட்டித்
தலையசைத்தேன்
ரயிலுக்குப் பின்னாலே
என் மனமும் சென்றதன்று.

அடுத்த சில தினங்களில்
நானும் ஊர் சேர்ந்தேன்
ஒருநாள் மாலை
அவள் வீடு நான் சென்றேன்
அவள் வீட்டார் அனைவரும்
என்னை வரவேற்றார்
எம் வீடு வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அழைத்திருந்தேன்
சில நாள் கழித்து
அன்னையுடன் அவள் வந்தாள்
எமது வீட்டாரும்
இன்முகத்தால் வரவேற்றார்.

பின்னர் இருதடவை
இருபேரும் ஒருமித்து
ஊருக்குப் பயணித்தோம்
பேசினோம் பேசினோம்
பேசிக் களித்திருந்தோம்
ஆனாலும் ஆனாலும்
இருவரில் ஒருவரும்
இதயத்தைத் திறக்கவில்லை
இருவரதும் உயிர்களுமே
இணைந்து பிணைந்தப்போ
ஓருயிர் ஆனதுவும்
எமக்குத் தெரியவில்லை.

நெடுநாட்கள் இவ்வாறு
நெஞ்சத்தைத் திறக்காமல்
நெடுமூச்சு விடுவது
எனக்குப் பொறுக்கவில்லை
ஒருநாள் மாலை
அவளைக் கண்டதுமே
நான் என் நெஞ்சகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலத் திறந்துகொண்டேன்
அவளும் தன் இதயத்தை
இணக்கமாய்த் திறந்து கொண்டாள்
மௌனம் கலைந்ததிலே
மகிழ்ச்சியும் நிறைந்தது
அடுத்த முறை வீடு சென்று
அறிவிப்போம் எம் கருத்தை
என்று நாம் இருபேரும்
இணக்கமாய் முடிவு செய்தோம்.

தனித்தனியே இருபேரும்
இரு வீட்டார் முன்னிலையில்
எம் இதயத்தைத் திறந்துவைத்தோம்
ஆச்சரியம் ஆனாலும்
அவர்கள் சம்மதித்தார்.

காதலினால் நாங்கள்
கட்டுண்ட போதிலுமே
கம்பஸ் பறவைகளாய்க்
கண்டபடி திரியவில்லை
பல்கலை விடுதியிலே
பலபேரின் முன்னாலே
சந்திப்பை வைத்திருப்போம்
ஊருக்குச் செல்கையிலே
ஒன்றாய்ப் பயணிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலும் நிறைவேறிக்
கல்யாணம் நிகழ்ந்தது
காத்திருந்து காத்திருந்து
காலமெல்லாம் காத்திருந்து
கலாநிதிப் பட்டம் கிடைத்த அதேநாளில்
ஆண்பிள்ளை ஒன்று இறந்து பிறந்ததுவே
அந்த ஒரே நாளில்
ஒருபுறமோ பெருமகிழ்ச்சி!
மறுபுறமோ
மனத்தை உடைத்துவிடும்
மாபெரிய துக்கநிலை!
அடுத்ததாய்ப் பிறிதோர் பிள்ளை
'அபோஷ'னாய் ஆகிப் போச்சு!

பின்னரே நவீனன் பிறந்து
பெரும் பேறு நாமும் பெற்றோம்
கடந்தவை மறந்து நாமும்
களிபெரு உவகை கொண்டோம்
நன்மகன் நன்றாய்க் கற்றுப்
பட்டமும் பதவி பெற்று
உயர்வுடன் வாழ்வதைத் தான்
உண்மையில் கனவு கண்டோம்
கனவுதான் கண்முன்னாலே
காட்சியாய் விரிந்தபோது
மனதிலே கவலை அற்று
மகிழ்ச்சியாய் இருந்துகொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் எல்லோரோடும்
அதிகமாய்ப் பழகும் பண்பு
அவளுக்கே வாய்த்த ஒன்று
எவருக்கும் முன்னே சென்று
உதவிகள் புரிவதற்கு
அவளுக்கு நிகராய் என்றும்
அவளையே சொல்லலாமே
ஜீவன்கள் மீது எல்லாம்
காருண்யம் காட்டும் போக்கு
அவளிடம் நிறைய உண்டு
யாரிலும் பொறாமை இல்லை
எவருக்கும் புத்தி சொல்வாள்
சரிபிழை என்பதெல்லாம்
முகத்துக்கு நேரே சொல்வாள்
கோபமும் வரும் தான்
ஆனால்
குணம் அதில் நிறைந்திருக்கும்
அநியாயம் கண்டால்
அவளின்
ஆத்திரம் அதிகமாகும்
பாத்திரம் அறிந்து
பிச்சை
போடுதல் அவளின் பழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலும் குளமும்
அவளின்
கொள்கையில் முதன்மை பெறுமே
பலகொல்ல அம்மன்
மற்றும்
முருகாமலை முருகன்
நல்ல அம்பக்கோட்டை ஆஞ்சனேயர்
ஆகியோர் எல்லாம் நன்றாய்
அவளிடம் பிரியம் கொள்வர்
ஆதலால் தானோ
அவர்கள் அவசரப்பட்டு
அவளை
அழைத்துளார் போலும் போலும்!

அன்புடன் "மனோ!" என்றும்
ஆசையாய் "அப்பா!" என்றும்
பண்புடன் அழைக்கும் குரலை
என்றுதான் இனிமேல் கேட்பேன்?
எத்தனை வயதானாலும்
'சாறி'க்கு ஊசி குத்தும்
பொறுப்பினை எனக்கே தருவாள்
இப்போ
'சாறி'யும் உண்டு
இங்கு ஊசியும் உண்டு
ஆனால்
ஆவலாய்ப் பேச மட்டும்
அவள் இங்கு இல்லைஇல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் எம் மகனும்
அவளின்
இருபெரும் கண்கள் ஆனோம்
இருவரின் உயர்ச்சியே தான்
அவளது எண்ணமெல்லாம்
எமக்குச்
சிறுவலி வந்தால் கூடத்
துடிதுடித்திடுவாள்
தனக்குப்
பெருவலி வந்தால்கூடப்
பொறுமையாய்த் தாங்கிக் கொள்வாள்.

எந்த ஓர் ஆணின் பின்னும்
பெண்ணவள் இருப்பாள் என்ற
உண்மையை உணரச் செய்தாள்
உறுதுணையாக நின்றாள்
எந்த ஓர் செயலின்போதும்
எனக்கு வழிகாட்டி நிற்பாள்
தோல்விகள் வந்தால் கூடத்
துவண்டிட விடவே மாட்டாள்
வீட்டின் நல் விடயமெல்லாம்
விரும்பியே தானே செய்வாள்
அறிவுரை கூறும் நல்ல
அமைச்சராய் நிற்பாள்
ஆசையாய்ப் பேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தோழியாய் அமைந்துகொள்வாள்
வீட்டினை வளவைச் சுத்தம்
செய்யும் ஓர் சேவகியாகத்
தன்னையே அர்ப்பணித்துப்
பெருமைகள் தவிர்த்து வாழ்ந்தாள்.

நிறைவுடன் வாழ்ந்தபோதும்
அவளது நினைவு எல்லாம்
ஒன்றுதான் ஒன்றே ஒன்று
மகனது திருமணத்தைக்
தன் கண்களால் கண்டு
தானே
களிப்புற வேண்டும் என்பாள்
அவனுக்காய்த் தேவதை ஒருத்தி
எங்கேயோ பிறந்திருக்கின்றாள்
அவளையே
கடவுள் கொணர்வார்
என்றுதான் காத்துக்கொண்டிருந்தாள்
ஆயினும் என்ன?
அவளே
கடவுளை அடைந்துவிட்டாள்.

எங்களுக்காக வாழ்ந்தாள்
எங்களுக்காகத்
தன் உடலையே வருத்திக்கொண்டாள்
தன்னலம் கருதாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்
கணவனைப் பிள்ளையைத்தான்
உலகமே என்று கொண்டாள்
என்றுமே எங்களுக்காய்
எல்லாமே செய்துவைத்தாள்
வாழ்க்கையில் சுமங்கலியாய்
வாழ்ந்துதான் சென்றுவிட்டாள்.

எங்களுக்காகவே என்றும் வாழ்ந்தவள்
என்றும் எங்கள் மனங்களில் இருக்கிறாள்
நல்லவை எல்லாம் நடந்திட
அவள் எமை
வல்லமையோடு வழிநடத்திடுவாள்
அல்லவை தடுப்பாள்
ஆயிரம் ஆயிரம் சக்தியை வழங்கி
அயராதெம்மை
உழைத்திடச் செய்வாள்
நேரினில் நின்று உதவுதல் போல
நேர்மறையாகச் செயற்படவைப்பாள்
தோழியாய்த்
தாயாய்
என்றும் திகழ்வாள்
வாழிய
அவள்தன் நினைவுகள் என்றும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுள் வாழும் என் அம்மா

**நினைவின் அலைகள்**

*ம.நவீனன்*

கனிவுற்ற கனிகள்
விரைவிலே கீழே விழலாம்
அதுபோல்
பிறவி எடுத்துள்ள மனிதர்கள்
எந்த நேரத்திலும்
மரணம் அடைந்துவிடக்கூடும்
- தம்மபதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுள் வாழும் என் அம்மா

## நினைவின் அலைகள்

*ம.நவீனன்*

இந்த மண்ணுலகில் பிறந்த எவரும் நிரந்தரமாக இவ்வுலகில் வாழ்வதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால், எமது வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்தவர்கள் திடீரென எம்மை விட்டுப் போவது என்பது இலகுவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல.

என் அன்புத்தாய் கடுமையான மாரடைப்பால் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியும், வெறும் பத்து நிமிடங்களின் பின், அவர் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியும் என்னை அடையும்போது நான் என் அன்புத்தாயிடமிருந்து வெகுதூரம் தொலைவில் இருந்தேன். அந்தச் செய்தியைக் கேட்டவுடன் என்ன நடந்துவிட்டது என்று கூட நினைத்துப்பார்க்க முடியாத ஒரு மனநிலை... சற்றும் எதிர்பாராத நேரத்தில் ஓர் அற்புதமான ஆன்மா இவ்வுலகைவிட்டு நீங்கிவிட்டது என்ற நினைவு மட்டும்தான் மனதில் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் தன்னுடைய தாய் ஒரு விசேடமானவர் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. ஆனால் எனது அம்மாவைப் பொறுத்தவரையில் அவர் மிகவும் விசேடமானவர். அத்தகைய ஒரு தாய் இப்பிறவியில் எனக்குக் கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன். என் வாழ்க்கையின் சில முக்கிய அத்தியாயங்களில் என் தாயாரின் நினைவுகள்...

**பாடசாலைக் கல்வியின்போது**

சின்னஞ்சிறிய எமது குடும்பத்தில் அம்மாவின் பங்களிப்பு அளப்பரியது. எமது குடும்பத்தின் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் அம்மாவின் தடயங்கள் நிச்சயம் உண்டு. அவரின் விடா முயற்சியும், சோர்வடையாத மனமும்தான் எங்கள் குடும்பத்தின் அத்திபாரம். பாடசாலையில் கல்வி கற்ற காலங்களிலும் சரி அதன் பின்னரான என் உயர்கல்வி வாழ்க்கையிலும் சரி, நான் சந்தித்த பல்வேறுபட்ட சவால்களின்போது அவரின் உதவிக்கரங்கள் என்றென்றும் மறக்கமுடியாதவை. தனிப்பிள்ளையாகிய எனது வாழ்க்கைப் பயணத்தில் எனக்கு உறுதுணையாக அவர் நின்றார். க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி பயிலும்போது பாடவிதானத் தெரிவுகளில் எனக்கு ஏற்பட்ட சில குழப்பங்களின்போது, ஓர் ஆசிரியை என்ற வகையில் அவர் எனக்குக் காட்டிய வழிகள் என்றும் மறக்கமுடியாதவை. அவரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றியதால், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற என்னால் முடிந்தது.

க.பொ.த. உயர்தரத்திற்குள் நுழைந்தபோது உயிரியல் விஞ்ஞானக் கல்வியைப் பயிலப்போவதாக நான் கூறியவுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றும் சளைக்காமல் அதற்குப் பக்கபலமாக இருந்தார். உயர்தரத்தில் கல்வி கற்கும்போது எனக்கு ஏற்பட்ட பல்வேறு தடங்கல்களைச் சமாளிக்க அவரின் துணை மிகப் பெறுமதியாக இருந்தது.

**வெளிநாட்டு மேற்படிப்புக் காலம்**

வெளிநாட்டில் மேற்படிப்புக் கல்வியைத் தொடர நான் விரும்பியபோது, தன்னைவிட்டு நான் இரண்டு வருடங்கள் பிரியப்போகிறேன் என்றுகூடச் சிந்திக்காமல், எனது விருப்பத்தை நிறைவுசெய்யவேண்டும் என்ற ஆவலுடன், நான் வெளிநாட்டில் சென்று கல்வி பயில்வதற்குத் தேவையான சகல ஒழுங்குகளையும் இலங்கையில் இருந்தபடியே அவர் செய்துகொடுத்தார்.

அதுமட்டுமல்லாது, நான் எதிர்காலத்தில் அந்நாட்டிலேயே தொழில் வாய்ப்பு கிடைத்தால், அங்கேயே நிரந்தரமாக வாழ்வதையும் அவர் ஊக்குவித்தார். நான் எங்கு வாழ்ந்தாலும் ஒரு நல்ல வாழ்க்கையை வாழவேண்டும் என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். ஆனால், விதிப்படியோ என்னவோ, எனக்கு உயர்கல்வி முடிந்ததும், நோர்வே நாட்டிலிருந்து நான் திரும்பிவந்துவிட்டேன். இன்று அந்த முடிவினால்தான் எனது தாயின் இறுதிக்கிரியைகளை என்னால் இயன்றவரை நிறைவேற்ற முடிந்துள்ளது.

**தொழில் தேடும் காலம்**

வெளிநாட்டில் உயர் கல்வி கற்றுவிட்டு இலங்கைக்குத் திரும்பிவந்த காலம் அது. வீட்டிலிருந்தபடியே தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக்கொண்டிருந்தேன். அது சுலபமானதாக இருக்கவில்லை. சில மாதங்களாகத் தடுமாறிக்கொண்டிருந்த எனக்கு, அம்மா தான் ஒரு பத்திரிகை விளம்பரத்தைக் கண்டு, அதற்கான நேர்காணலுக்கு என்னைக் கொழும்பிற்கு அழைத்துச் சென்றார். அந்த வேலை எனக்கு நீர்கொழும்பில் கிடைத்தது. ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நான் அங்கு வேலை செய்தேன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கண்டிக்கு வந்து அம்மாவின் கையால் சமைத்த உணவுகளைச் சாப்பிடக் கிடைத்த காலம் அது. அக்காலத்தில் ஒவ்வொரு கிழமையும் நான் வீட்டிற்கு வருவேன் எனத் தெரிந்து, விதம்விதமான உணவுகளை அவர் சமைத்துக் கொடுப்பார். ஒவ்வொரு கிழமையும் என்னைச் சந்திப்பது அவருக்கு ஓர் ஊக்கத்தைக் கொடுத்தது. ஒருமுறை நான் டெங்குக் காய்ச்சலால் அவதியுற்றபோது, வைத்தியசாலையில் இருந்த அந்த ஏழு நாட்களும் என்னுடனேயே என் தாயார் இருந்தமை மறக்கமுடியாத நினைவுகள்.

**இறுதிக் காலப்பகுதி**

காலவோட்டத்தில் எனது தொழிலை மாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வேறொரு தொழிலைத் தேடிய எனக்கு வீட்டிலிருந்து தூரத்தில் ஒரு தொழில் அமைந்தது. முன்னரைப் போல் அல்லாமல் மாதத்திற்கு ஒருமுறை மட்டும் வீட்டிற்கு வரும் சூழ்நிலை. அப்போதும்கூட அம்மா ஒருபோதும் என்னை வீட்டிற்கு அடிக்கடி வரும்படி வற்புறுத்தியதில்லை. ஆனால், நான் வீட்டிற்கு வருகிறேன் என்றால், அது அவருக்கு ஒரு விசேடமான நாள். நான் வீட்டில் நிற்கும் நாட்களில் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டு விதம்விதமாகச் சமைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களில் வயது முதிர்ச்சியின்போது உடலில் ஏற்படும் தளர்ச்சி அம்மாவிலும் தெரியத்தொடங்கியது. ஆனாலும், அம்மாவிற்கு ஒன்றும் ஆகிவிடாது என்ற நம்பிக்கையில் வாழ்ந்த எனக்கு, 03.09.2021 அன்று பிற்பகல் அந்த அதிர்ச்சியான செய்தி கண்டி வைத்தியசாலையிலிருந்து வந்தடைந்தது.

தன் குடும்பமே தன் உலகம் என வாழ்ந்த அந்த ஆன்மா, இவ்வளவு விரைவில் எம்மை விட்டுப் போய்விடும் எனச் சற்றும் நான் எதிர்பார்க்கவில்லை. தன் குடும்பத்திற்காக முழுச்சுமையையும் சுமந்துகொண்டு தன் உடல் ஆரோக்கியத்தை கூடப் பொருட்படுத்தாது வாழ்ந்த ஒரு தாயார் அவர். அவரின் வாழ்க்கையின் இறுதி நாட்களில் அவருடன் அருகில் இருக்கவில்லையே என்ற மனக்குறை என்றும் என் மனதில் இருந்துகொண்டே இருக்கும்.

அற்புதமான ஆன்மாக்கள் என்றும் இறைவனடி சேரும் என்பதில் ஐயமில்லை. என் தாயாரின் ஆன்மா சாந்தி அடையட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என் நினைவுகளில் சின்னக்கா

*ச. விக்கினேஸ்வரன்*

கடவுள்
அவர்களைச் சந்திக்க வரும்போது
அவர்கள் ஒளி வீசுவார்கள்
அரிதாள் நடுவே
தீப்பொறி போல,
பரந்து சுடர்வார்கள்
- திருவிவிலியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுகளில் சின்னக்கா

**ச. விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்)**

கடந்த மாதத்தின் (செப்ரெம்பர்) மூன்றாம் திகதி வெள்ளிக் கிழமை இலங்கையிலிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்திருந்தது. வழக்கம் போலச் சுகம் விசாரிக்கும் உறவுச் செய்தி என நினைத்திருந்தேன். எனது சகோதரி சின்னக்காவின் மறைவுச் செய்தி எனக்குப் பெரும் அதிர்ச்சியானது. எனது மூத்த சகோதரி கமலா அக்கா நோயுற்ற நிலையில் நீண்டகாலம் இருந்து வந்தவர். அவர் மறைவு என்பது, முன்கூட்டியே அனுமானிக்கப்பட்ட, சோக காலம் நிர்ணயிக்கப்பட்ட துயரச் சம்பவம். ஆனால், சின்னக்கா மறைவு அப்படி இருந்திருக்கவில்லை. நினைக்காதவை விரைந்து வந்து நடந்து முடிந்த இத்தருணத்தில் நின்று, சின்னக்கா நினைவுகளை எழுத முற்படுகிறேன்.

எங்கள் குடும்பம் மூன்று பிள்ளைகளைக் கொண்ட சிறிய குடும்பம். நான் கடைசிப்பிள்ளை. எனது பெரிய அக்கா கமலா அக்கா வீட்டின் வேலைகளை, பொறுப்புகளைச் சுமக்கும் தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். சின்னக்கா கனகா எனது சிறுபிராயத்தில் கூடிவிளையாடும் பழக்கம் கொண்டிருந்தார். இருவருக்கிடையிலும் வயது வேறுபாடு ஏழு ஆண்டுகள் ஆனாலும், என்னுடனான அவரின் சகோதரத்துவ உணர்வு, என்னை மகிழ்விக்கவேண்டும் என்ற உணர்வுநிலை கொண்டிருந்தது. அப்பாவின் வேலை, நமது கல்வியின் தேவை எனப் பல காரணிகளால் நாம் யாழ்ப்பாணத்திலும், அனுராதபுரத்திலுமாக இடம்பெயர்ந்து வாழ்ந்து மகிழ்ந்திருந்தோம்.

எழுபதுகளின் முற்பகுதியிலிருந்து எனது சின்னக்கா பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்த காலத்திலிருந்து நான் அவரிடம் இருந்த ஆற்றல்களைப் படிப்படியாக உணரத் தொடங்கியிருந்தேன். திட்டமிடல் பொருளியல் துறையில் அவர் நாட்டம் மிக்கவராக வெளிப்பட்டிருந்தார். உயர்கல்வி கற்ற காலங்களில், இத்துறைக்கு அவசியமாக இருந்த உயர்கணிதத்தை உள்வாங்க எடுத்த அவரது முயற்சிகள், எனக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தன. தமது பாடசாலைக் காலங்களில் கற்றிராத உயர்கணிதத்தின் பகுதிகளைத் தம் விடாமுயற்சி கொண்டு அறிந்து கற்றுக்கொண்டார். ஆர்வமும், விடாமுயற்சியும் ஒருவரை வெற்றி நோக்கி அழைத்துச் செல்லும் என்பதை, நான் அவர் மூலம் அக்காலத்தில் உணர்ந்துகொண்டேன்.

அவரது பல்கலைக்கழகக் காலத்துப் பொருளியல் அறிவு, எமது குடும்பத்தில் பயன்தரத் தொடங்கியது. அப்பா எமது குடும்பச் செலவினங்களை நெறிப்படுத்த, சின்னக்காவிடம் பொறுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்திருந்தார். இதன் மூலம், எமது குடும்பத்தின் நிதி மற்றும் எதிர்காலச் செயற்பாடுகளை நிர்ணயிக்கும் ஒருவராகச் சின்னக்கா மாறினார். இதன் மூலம், அவரது நிர்வாகத்திறன் வெளிப்பட்டுச் செழுமையானது.

சின்னக்கா தமது உயர்கல்வியைக் கற்றுவந்த காலத்தில், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் அன்று மாணவராக இருந்த மதிப்பிற்குரிய துரை. மனோகரன் அவர்களைத் தம் வாழ்வின் துணைவராகக் காணும் விருப்பம் கொண்டிருந்தார். தம் விருப்பத்தைப் பெற்றோரிடம் கூறித் திருமணச் சம்மதம் கேட்டபோது, எமது அப்பா கூறிய வார்த்தைகள் இன்னமும் என் நினைவில் இருக்கின்றன. குடும்ப வாழ்வை நெறிப்படுத்தும் வல்லமை கொண்ட ஒருவர் தம் துணையைத் தீர்மானிக்கும்போது, மறுப்பதற்கு எதுவுமில்லை என்று பதில் அளித்துச் சம்மதம் தெரிவித்திருந்தார். சின்னக்கா விருப்பப்படி, திருமணம் சிறப்பாக இடம்பெற்றது.

கண்டிப் பகுதியில் கிடைத்த தமது ஆசிரியைத் தொழிலுக்கு ஏற்பவும், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரான துணைவரின் வசதிக்கேற்பவும் கண்டிப்பகுதியில் குடியிருக்கும் முடிவை அவர் கொண்டிருந்தார். எமது குடும்பத்தில் அவர் பெற்றுக்கொண்ட சிறப்பான அனுபவங்கள், அவரது குடும்ப வாழ்வுக்கும் பெரும் பயனாய் அமைந்தன. சின்னக்கா தம் கணவருக்குச் சிறந்த துணையாக வாழ்ந்தும், தம் மகனுக்கு அறிவூட்டும் தீவிர தாயாக இருந்தும் சிறப்புடன் வாழ்ந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டில் வசித்துவரும் எனது குடும்பம் இலங்கை சென்றிருந்தபோது, எனது மனைவி, பிள்ளைகளை அன்புடன் வரவேற்று, தம் உறவுமுறை உணர்வூட்டியிருந்தார். பிள்ளைகளுடன் தமிழ்மொழி பேசும் வாய்ப்பு ஏற்பட்டதை உற்சாகப்படுத்தி, புலம்பெயர்ந்து வாழும் சமகாலச் சந்ததியின் தமிழ்மொழித் தேவையை ஊக்கப்படுத்தி இருந்தார். அவருடன் பழகிய நாட்களை, எனது பிள்ளைகள் தமது மகிழ்ச்சியான தருணங்களாக நினைவூட்டி வந்திருந்தனர். இவர்களுக்கும் அவரின் திடீர் மறைவு, உணர்வுபூர்வப் பாதிப்பாக மாறியுள்ளதை உணர்ந்துகொள்கிறேன். எனது சின்னக்கா தமது வாழ்வின் நிறைவான பல பத்தாண்டுகளைக் கடந்திருந்தார். அவரது மறைவின் துயர்நிலையில் நின்று, அவர் எமக்கு விட்டுச் சென்ற நல்ல அனுபவங்களை நினைவிற்கொள்ளும் காலத்தில் நிற்கிறேன்.

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்.
பெருமை முயற்சி தரும்."

இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வடையாது இருக்கவேண்டும் என்றும், இடைவிடாத முயற்சி, அதைச் செய்துமுடிக்கும் வலிமை தரும் என்றும் வள்ளுவப் பெருந்தகை தமது திருக்குறள் மூலம் எமக்களித்த அறிவுரைக்குப் பொருத்தமுடையவராக வாழ்ந்தவர், எனது சகோதரி. அவர் தம் வாழ்வின் மூலம் எமக்களித்த அறிவுரைகளைப் பெருமையுடன் ஏற்று, மன ஆறுதல் தேடுகின்றோம்.

தம்பி ச. விக்கினேஸ்வரன்
மைத்துனி தவமணி, மருமக்கள் சகானா, தர்சியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதலும் புதுவதன்றே

*செ. சுதர்சன்*

---

சீலமும் தர்மமும்
சிதைவு இல் செய்கையும்
சூலமும் திகிரியும்
சொல்லும் தாங்கிய
மூலம் வந்து உதவிய
மூவர்க்காயினும்
காலம் என்று ஒரு வலை
கடக்கல் ஆகுமோ?
-கம்பராமாயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதலும் புதுவதன்றே

மண்ணில் மரணம் மகத்துவமானதே. அது பெருந் தத்துவம். வாழ்வுப் பெருங்கதையின் முடிவு மட்டுமல்ல தொடக்கமும் அதுவே. பிறந்து இறந்து - இறந்து பிறந்து பொருள் முடியாக் கவியாய்த் தொடர்கிறது மரண வாழ்வு. எதுவும் புதிதில்லை . சாதலுந்தான். சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனார் "சாதலும் புதுவதன்றே" என்று கூறினார். அழைக்காமல் வருவதும் சொல்லாமல் போவதும் உயிருக்குச் சிறப்பு. மரணமும் அழைக்காமல் வந்து சொல்லாமல் போகிறது. மரணத்தை நிறுத்தி வைத்தவர் யார்? சாவின் வாய்க்கு மனிதர்கள் எல்லோரும் கவளமாகத்தான் வேண்டும்.

இறப்பதே உலகின் உயர்ந்த பெருமை. வள்ளுவப் பெருஞானி கூறுகிறான், "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ்வுலகு." மரணிப்பதே உலகின் மிகப்பெரும் புகழ். "இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கும் இறுதி உண்டோ?" என்கிறார், கம்பநாட்டாழ்வார். "பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும் உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறது மணிமேகலை. "தோற்றம் சால் ஞாயிறு நாளியா வைகலும் கூற்றம் அளந்து நும் நாளுண்ணும்" என்று நாலடி செப்புகிறது. நாம் வாழும் நாள்களெல்லாம் காலத்தை அறுக்கும் ஒரு வாள் என்பதை "வாள்களாகி நாள்கள் செல்ல" என்கிறது திருச்சந்த விருத்தம்.

மரணம் உயிர்க்கில்லை . உடலுக்காயின்? உடல் மாற்றமுறும். மாற்றமுறுவதே மரணம். நில்லாத தன்மையே நிலையாமை. "இளமையும் நிலையாவாம் இன்பமும் நின்றவல்ல வளமையும் அஃதே போல் வைகலும் துன்பவெள்ளம் உளவென நினையாதே செல்கதிக்கென்றும் என்றும் விளைநிலம் உழுவார் போல் வித்துநீர் செய்துகொண்மின்" என்று செப்பும், வளையாபதி.

நிலையற்றதில் நிலைக்காது. நிலையானதில் நிற்பின் மரணமேது? "இன்றுளார் நாளையில்லையெனும் பொருள் ஒன்றும் ஓராது" என்று அப்பர் சுவாமிகள் கூறும் நிலை இருக்காது. இருப்பினும் மரணத்தின் தன்மையை யார் அறிவார்? "உடம்பொடு உயிரிடை நட்பறியாதார்" மரணத்திற்குக் கலங்குவர் என்று திருமூலர் செப்புகிறார். "மின்னின் நிலையில் மன்னுயிர் யாக்கைகள் பிறந்தார் பெயரும் தன்மை பிறரால் அறிதற்கெளிதோ?" என்று திருவாய்மொழி உரைக்கிறது. மரணத்தின் தன்மையை யார் அறிவார்? மரணத்தை வென்றோரே அறிவர். "பக்தன் சாவதில்லை, முன்பே செத்துப்போனவன்" என்கிறார் ரமண மாமுனிவர். "இனி நான் வருவதாயின் புதிய உடலோடு வருவேன்" என்றார் ஸ்ரீஅரவிந்தர். "நான் இறந்து அடக்கம் செய்வதற்குமுன் என்னைக் கண்டுபிடித்துக் கைதுசெய்யுங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்றார் சோக்கிரட்டீஸ். இவர்கள் மரணத்தை வென்றவர்கள். சாதல் புதிதல்ல என்பதை அறிந்தவர்கள். மரணம் அமைதியின் கீதமாய் இவர்களுக்கிருந்தது.

இன்றைய உலகு மரணத்தின் பிடியில் சிக்கித் தவிக்கின்றது. நோய் எனும் பாயில் மனிதனை வீழ்த்தி மரணவலை விரிக்கிறது கொரோனா எனும் பெருந்தொற்று. அச்சத்தில் உலகம் உறைந்து கிடக்கின்றது. வாழ்வு யாத்திரையின் மீதி வீதியைக் கடக்க முடியாத ஏக்கம் எக்கணமும் எழுகிறது.

காலன் நமது கனகாம்பிகை அம்மையாரையும் பறித்துச் சென்றான். அன்ரி என்று நாம் அன்போடும் உரிமையோடும் சுமார் இருபது வருடங்களுக்கு மேலாகப் பழகிய அன்னாரின் இழப்பு பெருந்துயரமானது. உயர்ந்த மானுடப் பண்புகளின் உறைவிடமாய் திகழ்ந்த அம்மையாரின் இழப்பு எம் ஆசான் பேராசிரியர் துரை. மனோகரன் அவர்களுக்கும் அவர்தம் புதல்வர், நம் அன்புச் சகோதரர் திரு. ம. நவீனன் அவர்களுக்கும் வாழ்வு முழுவதும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பு என்பதை நாம் நன்கு அறிவோம். உயிர் ஒருபோதும் இறப்பதில்லை, மரணம் உடலுக்குத்தான் என்பதை நினைந்து இருவரும் துயர் தணியவும் அம்மையாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளியால்
# எழுதும்
# நினைவுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

அமரர் கனகாம்பிகை மனோகரன் அவர்களின் திடீர் மறைவு, எம்மால் ஈடு செய்யமுடியாத ஒரு பேரிழப்பாகும். அதனைத் தாங்கிக் கொள்வதற்குப் பலவகைகளிலும், பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் முதற்கண் எமது நன்றியைப் பகிர்ந்து கொள்கிறோம்.

கனகாம்பிகை மனோகரன் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது முதல் அவரது இறுதிவரையிலும், அதன் பின்னரும் வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து உதவிய கண்டி பலகொல்லையைச் சேர்ந்த சந்திரகுமார் - பிரமிளா தம்பதியினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் விசேட நன்றியினைத் தெரிவிப்பது எமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியில் இறுதிச் சடங்கின்போது, உற்ற துணையாக நின்று உதவிய எமது நெருங்கிய உறவினரான ச. சாதுளனுக்கும், அவரது சகலனுக்கும் எம் அன்பு கலந்த நன்றி.

அவரது இறுதிக் கிரியைகளை முறையாக நடத்திவைத்த குருக்கள்மாருக்கும் எமது மதிப்பு மிக்க நன்றி.

தமது வீட்டிலேயே வீட்டுச் சடங்குகள், தான தருமங்கள் அனைத்தையும் நிறைவாகச் செய்து உதவிய அமரர் கனகாம்பிகை மனோகரனின் அக்காவின் மகனும், மருமகளுமாகிய வைத்திய கலாநிதி ச. கணேஷ்குமார் - துஷ்யந்தி தம்பதியினருக்கும், அவர்களோடு ஒத்துழைத்த அனைவருக்கும் எம் பெரு நன்றியினைத் தெரிவிப்பதில் நாம் திருப்தி கொள்கிறோம்.

அமரர் கனகாம்பிகை மனோகரனின் இந்நினைவு மலருக்கு நினைவுக் குறிப்புகள் வழங்கியதோடு, இந்நினைவு மலர் சிறப்புற வெளிவர ஆவனசெய்த அவரின் இளைய சகோதரர் ச. விக்கினேஸ்வரனுக்கும் எமது அன்பு நிறைந்த நன்றி.

இந்நினைவு மலரை இத்தனை சிறப்பாக வெளியிடுவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்து உதவியதோடு, நினைவுக் குறிப்புகளும் வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சனுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரை அழகுற வடிவமைத்து அச்சேற்றி உதவிய யாழ்ப்பாணம் திருநெல்வேலி குரு அச்சகத்தாருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

அமரர் கனகாம்பிகை மனோகரனின் இன்றைய நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதில் நாம் நிறைவு கொள்கிறோம்.

பேராசிரியர்
துரை. மனோகரன்
ம.நவீனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்காகவே என்றும் வாழ்ந்தவள்
என்றும் எங்கள் மனங்களில் இருக்கிறாள்
நல்லவை எல்லாம் நடந்திட
அவள் எமை
வல்லமையோடு வழிநடத்திடுவாள்
அல்லவை தடுப்பாள்
ஆயிரம் ஆயிரம் சக்தியை வழங்கி
அயராதெம்மை
உழைத்திடச் செய்வாள்
நேரினில் நின்று உதவுதல் போல
நேர்மறையாகச் செயற்படவைப்பாள்
தோழியாய்த்
தாயாய்
என்றும் திகழ்வாள்
வாழிய
அவள்தன் நினைவுகள் என்றும்!

\- துரை. மனோகரன்



Guru Printers, Thirunelvely. 021 222 8266.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org